# மழலையர் பள்ளி குழந்தைகள் கற்பதில் விருப்பம் காட்டுவார்கள்

## மழலையர் பள்ளி என்றால் என்ன?

மழலையர் பள்ளிக் கல்வி என்பது குழந்தைகள் பள்ளி செல்லத் தொடங்கும் முன்பான கல்வித் திட்டமாகும்.

மழலையர் பள்ளித் திட்டம் பட்டப்படிப்பு தகுதிபெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. மழலையர் பள்ளியில் உங்கள் குழந்தை பள்ளிக்குச் செல்லத் தயாராக தேவையான முக்கியத் திறன்களைப் பெறுவார்.

## மழலையர் பள்ளித் திட்டம் என் குழந்தைக்கு ஏன் முக்கியம்?

மழலையர் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் வாசித்தல், எண்களை எண்ணுதல் மற்றும் கண்டறிதல் மற்றும் சிக்கலை எவ்வாறு தீர்ப்பது போன்ற அனைத்து எதிர்கால கற்றலுக்கான அடித்தளமான திறன்களைப் பெறுவார்கள். உங்கள் குழந்தை விளையாட்டின் மூலம் கற்பார். இது தான் இளம் வயது குழந்தைகளுக்கு கற்பிக்க சிறந்தவழி என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மழலையர் பள்ளியில் உங்கள் குழந்தை புதிய நண்பர்களைப் பெறுவார் மற்றும் நம்பிக்கை மற்றும் தற்சார்பை வளர்த்துக் கொள்வார்.

## யார் மழலையர் பள்ளித் திட்டங்களை வழங்குகிறார்கள்?

மழலையர் பள்ளித் திட்டங்கள் பெரும்பாலான டே கேர் மையங்களின் மூலம் கிடைக்கின்றன, மேலும் தனிப்பட்ட மழைலையர் பள்ளி சேவைகள் மூலமும் நீங்கள் பெறலாம்.

## என் குழந்தைக்கான சிறந்த மழலையர் பள்ளியை நான் எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

நீங்கள் அணுகும் சேவை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட மழலையர் பள்ளியா என்று சரிபார்ப்பது நல்லது - சேவையில் 'நிதியளிக்கப்பட்ட மழலையர் பள்ளி' சான்றிதழ் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதா எனப் பாருங்கள்.

தேசிய தரக் கட்டமைப்பு எனப்படும் ஒரு அமைப்பின் கீழ் அனைத்து மழலையர் பள்ளி மற்றும் டே கேர் சேவைகளின் தரத்தை அரசாங்கம் மதிப்பிடுகிறது மற்றும் ஒவ்வொரு சேவைக்கும் தரத்திற்கான மதிப்பீட்டை வழங்குகிறது. அனைத்து சேவைகளும் அவர்களின் மதிப்பீட்டை காட்சிப்படுத்த வேண்டும். அவர்கள் பெற்ற மதிப்பீட்டை காண்பிக்கும்படியும் உங்களிடம் கூறும்படியும் நீங்கள் அணுகும் சேவையைக் கேட்கலாம்.

உங்கள் குடும்பத்திற்கு இந்த சேவை பொருத்தமானது தானா என்பதை உறுதிசெய்ய டே கேர் பராமரிப்பு சேவை அல்லது மழலையர் பள்ளிக்குச் சென்று, சுற்றிப் பார்த்து, மழலையர் பள்ளித் திட்டம் உங்கள் குழந்தைக்கு என்ன வழங்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள ஆசிரியர்களுடன் பேசுவது தான் சிறந்த வழியாகும்.

## இன்னும் என் குழந்தையால் ஆங்கிலத்தில் பேச முடியாவிட்டால் என்ன ஆகும்?

மழலையர் பள்ளி ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தில் அனைத்து குழந்தைகளையும் சேர்த்துக்கொள்கிறார்கள், எனவே ஆங்கிலம் பேசாத குழந்தைகளுக்கு மற்றவர்களைப் போல விளையாடுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் அதே வாய்ப்புகள் கிடைக்கும்.

சில மழலையர் பள்ளிகளில் இருமொழி கல்வியாளர்களும் இருக்கலாம், அவர்கள் ஆங்கிலம் குறைவாகபேசும் அல்லது முற்றிலும் ஆங்கிலம் பேசாத குழந்தைகளுக்கு கூடுதல் உதவியை வழங்க முடியும்.

## மழைலையர் பள்ளியில் கற்பதற்கான செலவு என்ன?

அனைத்து குழந்தைகளும் பள்ளி செல்வதற்கு முந்தைய ஆண்டில், வாரத்தில் 15 மணிநேர மழலையர் பள்ளிக்குச் செல்வதற்கு அரசாங்கம் நிதி வழங்குகிறது. பெரும்பாலான சேவைகள் அரசு நிதிக்கு கூடுதலாக கட்டணம் ஒன்றை வசூலிக்கின்றன.

சில குடும்பங்கள் கூடுதல் கட்டங்ககளைச் செலுத்த ஒரு மானியத்தைப் பெறலாம், எடுத்துக்காட்டாக உடல்நலப் பராமரிப்பு அட்டைகள் அல்லது மனிதாபிமான விசாக்கள் கொண்ட குடும்பங்கள். மேலதிகத் தகவலுக்கு மழலையர் பள்ளி சேவை வழங்குநருடன் பேசுங்கள்.

## என் குழந்தையை மழலையர் பள்ளியில் எவ்வாறு பதிவுசெய்வது?

உங்களுக்குத் தெரிந்த மழலையர் பள்ளிச் சேவை இருந்தால், உங்கள் குழந்தையை அங்கு பதிவுசெய்ய நீங்கள் அவர்களை தொடர்பு கொள்ள விரும்பலாம். பல உள்ளூர் கவுன்சில்கள் மழலையர் பள்ளி மத்திய சேர்க்கைத் திட்டங்களைக் கொண்டுள்ளன, எனவே உங்கள் குழந்தையை மழலையர் பள்ளியில் பதிவு செய்ய உங்கள் உள்ளூர் கவுன்சிலைக் கேளுங்கள் அல்லது உங்கள் உள்ளூர் தாய் மற்றும் சேய் சுகாதார செவிலியரிடம் கேளுங்கள்.

பெரும்பாலான மழலையர் பள்ளி அடுத்த ஆண்டுக்கு நடப்பு ஆண்டின் நடுவில் குழந்தைகளை சேர்க்கிறது. பல மழலையர் பள்ளிகள் வெயிட்டிங் லிஸ்ட்களைக் கொண்டுள்ளன, எனவே நீங்கள் விரும்பும் இடத்தில் குழந்தையைச் சேர்ப்பதற்கான சிறந்த வாய்ப்பைப் பெற உங்கள் குழந்தையை விரைவில் சேர்ப்பது நல்லது.

## மேலும் அறிக

### வலைத்தளங்கள்

உங்கள் குடும்பதிற்குப் பொருத்தமான மழலையர் பள்ளியைக் கண்டறிய ஆலோசனைப் பெறுங்கள்:

www.education.vic.gov.au/parents/childcare-kindergarten/Pages/default.aspx

உங்கள் பகுதியில் மழைலையர் பள்ளியைத் தேடுங்கள்:

www.education.vic.gov.au/findaservice/Home.aspx

### தொலைபேசி

| | |
|---|---|
| வட கிழக்கு விக்டோரியா | 1300 333 231 |
| வடமேற்கு விக்டோரியா | 1300 338 691 |

தென்கிழக்கு விக்டோரியா 1300 338 738

தென் மேற்கு விக்டோரியா 1300 333 232

உங்கள் மொழியில் உதவி பெற:

- தேசிய மொழிபெயர்ப்புச் சேவை (TIS) ஐ 131 450 -என்ற எண்ணில் அழைக்கவும்.
- அவர்களை உங்கள் பகுதிக்கான எண்ணில் அழைக்கச் சொல்லுங்கள் (மேலே பார்க்கவும்)
- அவர்கள் அழைப்பிலேயே இருந்து மொழிபெயர்ப்பார்கள்.